**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Crl.M.P.No. 2564/2025**

**Deposition of CW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பூவதி | **Age** | : | 62/2026 |
| **Husband's Name** | : | திரு. மணி | **Religion** | : | இந்து |
| **Village** | : | T. மீனாட்சிபுரம் | **Calling** | : | ஓய்வு |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02/07/2026.**

**சத்தியபிரமாண வாக்குமூலம்**

1) நான் பால் வாங்குவதற்காக எனது தோட்டத்தில் உட்கார்ந்து இருந்தேன் அப்போது பிரபு என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தார். என்னை எழுந்திருக்க சொன்னார் நான் எழுந்திருந்தேன். எங்க உன் புருஷனை நான் அவனை செய்வேன் அப்படின்னு சொன்னாப்ல. என்னப்பா இப்படி பேசுகிறாய் என்று நான் கேட்டேன். அதுக்கு பிரபு அப்படித்தான் பேசுவேன் உன் புருஷன வாயில செய்வேன் என அசிங்கமாக பேசினார். உன் மகனை கூப்பிடுலா உன் மகனே வாயில செய்யணும் என அசிங்கமாக பேசினார்.

2) அப்போது சண்முகம் மேற்கிலிருந்து வந்தார் அவரிடம் பிரபு இவளை அடிடா என பிரபு சொல்லவும் இரண்டு நபர்களும் சேர்ந்து என்னை அடித்துவிட்டார்கள். சத்தம் வெளியில் கேட்க விடாமல் எனது வாயையும் பொத்திக் கொண்டார்கள். அவமானப்படுத்தி இவளை கொல்ல வேண்டும் என பிரபு சொன்னார். காலை பிடித்து இழுத்து எனது மார்பை பிடித்து பிசைந்து விட்டார்கள். என்னால்

அவர்களிடமிருந்து தப்பிக்க இயலவில்லை. எனது ஜாக்கெட்டை கிழித்து நாசம் செய்து விட்டார்கள்.

3) எனது கணவர் வரவும் எதிரிகள் இருவரும் ஓடிவிட்டார்கள். நான் இது சம்பந்தமாக தேவாரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது அவர்கள் வழக்கை எடுக்கவில்லை. நான் அதன்பிறகு பாளையம் மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து தேனி க.விலக்கு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றேன். என்னை கழுத்தை நெறித்ததால் நான் 3 நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன். எனவே எதிரிகள்மீது நடவடிக்கை எடுக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.02 19:11:57 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**